வள்ளலார் பாடல்கள்

(நாளும் பாடலாம்)

மணநாள் :
22-08-2024

மணமக்கள் : M.ஸ்ரீநிதி (எ) நற்சோணை – R.யோகேஷ்வரன்

மணமக்கள் : M.ஸ்ரீநிஷா – S.முரளி

உ

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி துணை ஸ்ரீ அன்பிற்பிரியாளம்மன் துணை

திருமணத் திருமுகம்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட்பேறு. - திருக்குறள் - 60

பேரன்புடையீர்!

வணக்கம். அம்மையப்பர் திருவருளாலும் ஆன்றோர் நல்லருளாலும் நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2055, ஆவணித் திங்கள் 6-ஆம் நாள் **வியாழக்கிழமை (22-08-2024)** காலை 9.00 - 10.30 மணியளவில்

அரியலூர், தெய்வத்திரு.க.ரங்கநாதன்-சுபத்திரா
திருச்சி, தெய்வத்திரு.சு.தங்கவேல்-த.சரஸ்வதி அவர்களின் பெயரனும்
தாம்பரம், திரு.சு.ர.ராஜசேகர்-திருமதி.ரா.ஜெயஸ்ரீ இணையரின் மகனுமான
திருவளர்செல்வன்

ரா.யோககேஸ்வரன்

என்ற நம்பிக்கும்

ராணிபேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம்,
தாமரைப்பாக்கம், தெய்வத்திரு.சாமி சுந்தரமூர்த்தி-பரமேஸ்வரி,
குன்றத்தூர் திரு.க.மு.சங்கரன்-காமாட்சி அவர்களின் பெயர்த்தியும்
சென்னை, குரோம்பேட்டை, திரு.சு.முரளி-தெய்வத்திரு.இந்திரா முரளி
இணையரின் மூத்த மகளான
திருவளர்ச்செல்வி

மு.ஸ்ரீநிதி (நற்சோணை)

என்ற நங்கைக்கும்

திருமணம் தமிழ்நெறி வேள்விச்செம்மல் சிவனகம் ந.அருளரசு அவர்களால் செந்தமிழ்த் திருமுறைகள் தமிழ் வேள்ளியுடன் காஞ்சிபுரம், திருவிடந்தை, நித்ய கல்யாண பெருமாள் கோயில் பின்புறம் உள்ள **மித்தம் (Miththam) இல்லத்தில்** நடைபெறவுள்ளது. அவ்வமயம் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

அன்பில் மகிழ்வில்...

திரு.சு.ர.ராஜசேகர்
திருமதி.ரா.ஜெயஸ்ரீ

திரு.சு.முரளி

நல்வரவை நாடும்...

சு.ரா.சாதவி   மு. ஸ்ரீநிஷா

வள்ளலார் பாடல்கள்

(நாளும் பாடலாம்)

எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே
எல்லாம்வல் லான்தனையே ஏத்து.



வள்ளலார் பாடல்கள்

(நாளும் பாடலாம்)

1. பொன்னாகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி அகமாகிப் புனித மாகி
மன்னாகி மலையாகிக் கடலு மாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி எங்கும்
மின்னாகிப் பரவிஇன்ப வெள்ளந் தேக்க
வியன்கருணை பொழிமுகிலாய் விளங்குந் தேவே.

2. பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாந்
தணிக்கின்ற தருவே பூந் தடமே ஞானச்
செங்குமுத மலரவரு மதியே எல்லாம்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே.

3. பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறும் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல் மறந் தாலும்
கற்ற நெஞ்சகம் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே.

4. தேன்என இனிக்கும் திருவருட் கடலே
தெள்ளிய அமுதமே சிவமே
வான் என நிற்கும் தெய்வமே முல்லை
வாயில் வாழ் மாசிலா மணியே
ஊன்என நின்ற உணர்விலேன் எனினும்
உன்திருக் கோயில்வந் தடைந்தால்
ஏன்எனக் கேளா திருந்தனை ஐயா
ஈதுநின் திருவருட் கியல்போ.

5. வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவை கலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

6. சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ் கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும் ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும் அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும் என் கண்ணுற்றதே.

7. பண்ஏறும் மொழிஅடியர் பரவி வாழ்த்தும்
பாதமலர் அழகினைஇப் பாவி பார்க்கில்
கண்ஏறு படும்என்றோ கனவி லேனும்
காட்டென்றால் காட்டுகிலாய் கருணை ஈதோ
விண்ஏறும் அரிமுதலோர்க் கரிய ஞான
விளக்கே என் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ஏறு பொழில் தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே.

8. காமஉட் பகைவனும் கோபவெங் கொடியனும்
கனலோப முழுமூடனும்
கடுமோக வீணனும் கொடுமதம் எனுந்துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்
ஏமம்அறு மாச்சரிய விழலனும் கொலைஎன்
றியம்புபா தகனுமாம் இவ்
வெழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமல் அருள்வாய்
சேமமிகு மாமறையின் ஓம்எனும் அருட்பதத்
திறன்அருளி மலயமுனிவன்
சிந்தனையின் வந்தனைஉ வந்தமெய்ஞ் ஞானசிவ
தேசிக சிகாரத்னமே
தாமம்ஒளிர் சென்னையில் கந்தகோட் டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

9. ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள் ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

10. அருளார் அமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம்
பொருளா எனைஆள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணம் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணம் சரணம்
மயில்வா கனனே சரணம் சரணம்
கருணா லயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

11. இன்றுவருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்
றென்றுவருமோ அறியேன் எங்கோவே - துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம்.

12. அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் ளமைந்த பேர் ஒளியே
அன்புரு வாம்பர சிவமே.

13. விளக்கறியா இருட்டறையில் கவிழ்ந்து கிடந் தழுது
விம்முகின்ற குழவியினும் மிகப்பெரிதும் சிறியேன்
அளக்கறியாத் துயர்க்கடலில் விழுந்து நெடுங் காலம்
அலைந்தலைந்து மெலிந்ததுரும் பதனின்மிகத் துரும்பேன்
கிளக்கறியாக் கொடுமை எலாம் கிளைத்தபழு மரத்தேன்
கெடுமதியேன் கடுமையினேன் கிறிபேசும் வெறியேன்
களக்கறியாப் புவியிடைநான் ஏன் பிறந்தேன் அந்தோ
கருணைநடத் தரசேநின் கருத்தைஅறி யேனே.

14. மருந்தறியேன் மணிஅறியேன் மந்திரம்ஒன் றறியேன்
மதிஅறியேன் விதிஅறியேன் வாழ்க்கை நிலை அறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினில்ஓர் இடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தஅறி வேனோ
இருந்ததிசை சொலஅறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்ன செய்வேன் ஏதும் அறிந் திலனே.

15. சாதிமதம் சமயம் எனும் சங்கடம்விட் டறியேன்
சாத்திரச்சே றாடுகின்ற சஞ்சலம் விட் டறியேன்
ஆதிஅந்த நிலையறியேன் அலைஅறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத் தமர்ந்திடவும் அறியேன்
நீதிநெறி நடந்தறியேன் சோதிமணிப் பொதுவில்
நிருத்தமிடும் ஒருத்தர் திருக் கருத்தைஅறி வேனோ
ஏதிலர்சார் உலகினிடை எங்ஙனம் நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே.



16. தந்தை நீ அலையோ தனயன்நான் அலனோ
தமியனேன் தளர்ந்துளங் கலங்கி
எந்தையே குருவே இறைவனே முறையோ
என்றுநின் றோலிடு கின்றேன்
சிந்தையே அறியார் போன்றிருந் தனையேல்
சிறியனேன் என்செய்கேன் ஐயோ
சந்தையே புகுந்த நாயினில் கடையேன்
தளர்ச்சியைத் தவிர்ப்பவர் யாரோ.

17. பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தால்
பணிகின்றேன் பதியே நின்னைக்
கூட்டுவித்தால் கூடுகின்றேன் குழைவித்தால்
குழைகின்றேன் குறித்த ஊணை
ஊட்டுவித்தால் உண்கின்றேன் உறக்குவித்தால்
உறங்குகின்றேன் உறங்கா தென்றும்
ஆட்டுவித்தால் ஆடுகின்றேன் அந்தோ இச்
சிறியேனால் ஆவ தென்னே.

தடித்த ஓர் மகனைத் தந்தை ஈண் டடித்தால்
தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன் இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மை அப்பா இனி ஆற்றேன்.

18. மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணும்அவ் வருத்தம் தவிர்க்கும் நல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்.

19. வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோர் என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய் நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.



20. அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண் டுவனே.

21. சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்
நீதியும் நிலையும் சத்தியப் பொருளும்
நித்திய வாழ்க்கையும் சுகமும்
ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெருஞ் சோதி என் றறிந்தேன்
ஓதிய அனைத்தும் நீஅறிந்தது நான்
உரைப்பதென் அடிக்கடி உனக்கே.

22. படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதும் இந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடல்உயிரா திய எல்லாம் நீ எடுத்துக் கொண்டுன்
உடல்உயிரா தியஎல்லாம் உவந்தெனக்கே அளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாய் என் கண்ணுள்
மணியே என் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியே என் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராச மணியே.

23. வாழைஅடி வாழை என வந்ததிருக் கூட்ட
மரபினில் யான் ஒருவன்அன்றோ வகைஅறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குந் திருவுளச்சம் மதமோ
இது தகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யான் உனக்கு
மகன்அலனோ நீஎனக்கு வாய்த்ததந்தை அலையோ
கோழை உல குயிர்த்துயரம் இனிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருள்ஒளியைக் கொடுத்தருள் இப்பொழுதே.

24. உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியேன் உன்ஆணை இது நீ
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவாய் எனில் யான்
என்னசெய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பேன் எந்தாய்
அன்னையினும் தயவுடையாய் நீ மறந்தாய் எனினும்
அகிலம்எலாம் அளித்திடும் நின் அருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே இருக்கின்றேன் மறவேல்
இதுதருணம் அருட்சோதி எனக்கு விரைந் தருளே.

25. படமாட்டேன் துயர்சிறிதும் படமாட்டேன் இனிநான்
பயப்படவும் மாட்டேன் நும் பதத்துணையே பிடித்தேன்
விடமாட்டேன் ஏமாந்து விடமாட்டேன் கண்டீர்
மெய்ம்மை இது நும்மாணை விளம்பினன் நும் அடியேன்
கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவும் மாட்டேன்
கிளர்ஒளிஅம் பலத்தாடல் வளர் ஒளிநும் அல்லால்
நடமாட்டேன் என்உளத்தே நான்சாக மாட்டேன்
நல்லதிரு வருளாலே நான்தான்ஆ னேனே.

26. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண் இடைமலர்ந்த சுகந்த மண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல்அணிந் தருளே.

27. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம் அளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே
என்அரசே யான்புகலும் இசையும்அணிந் தருளே.



28. அருட்சோதித் தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகள் எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம் உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

29. தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிகர் இல்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடி என் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்
காயாது கனியாகிக் கலந்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வம்முற்றுங் காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக எனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் ஆடுகின்ற தெய்வமதே தெய்வம்.

30. பொழுது விடிந்ததென் உள்ளமென் கமலம்
பூத்தது பொன் ஒளி பொங்கிய தெங்கும்
தொழுதுநிற் கின்றனன் செய் பணி எல்லாம்
சொல்லுதல் வேண்டும்என் வல்லசற் குருவே
முழுதும்ஆ னான் என ஆகம வேத
முறைகள் எலாம்மொழி கின்றமுன் னவனே
எழுதுதல் அரியசீர் அருட்பெருஞ் சோதி
என்தந்தை யேபள்ளி எழுந்தருள் வாயே.

31. குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குமைந்துவீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கிஏ மாந்து
நிற்கின்றார் நிற்கநான் உவந்து
வலத்திலே நினது வசத்திலே நின்றேன்
மகிழ்ந்துநீ என்உளம் எனும்அம்
பலத்திலே நின்றாய் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே.

❑❑❑



திருச்சிற்றம்பலம்

பல்லவி

வருவாரை அழைத்து வாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம் நல்ல வரமே.

பல்லவி எடுப்பு

திருவார்பொன் னம்பலத்தே செழிக்குங்குஞ் சிதபாதர்
சிவசிதம் பரபோதர் தெய்வச் சபாநாதர் (வருவார்

கண்ணிகள்

சிந்தை களிக்கக்கண்டு சிவானந்த மதுவுண்டு
தெளிந்தோர்எல் லாரும்தொண்டு செய்யப் பவுரிகொண்டு
இந்த வெளியில்நட மிடத்துணிந் தீரேஅங்கே
இதைவிடப் பெருவெளி இருக்குதென் றால்இங்கே (வருவார்

இடுக்கி லாமல்இருக்க இடமுண்டு நடஞ்செய்ய
இங்கம் பலம்ஒன்றங்கே எட்டம் பலம்உண்டைய
ஒடுக்கில் இருப்பதென்ன உளவுகண்டு கொள்வீர்என்னால்
உண்மைஇது வஞ்சமல்ல உம்மேல்ஆணை
என்று சொன்னால் (வருவார்

மெல்லியல் சிவகாம வல்லி யுடன்களித்து
விளையா டவும்எங்கள் வினைஓ டவும்ஒளித்து
எல்லையில் இன்பந்தரவும் நல்லசம யந்தானிது
இங்குமங்கும் நடமாடி இருக்கலாம் என்றபோது

வருவாரை அழைத்து வாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம் நல்ல வரமே.

திருச்சிற்றம்பலம்.

உ

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி துணை ஸ்ரீ அன்பிற்பிரியாளம்மன் துணை

திருமணத் திருமுகம்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட்பேறு. - திருக்குறள் - 60

பேரன்புடையீர்!

வணக்கம். அம்மையப்பர் திருவருளாலும் ஆன்றோர் நல்லருளாலும் நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2055, ஆவணித் திங்கள் 6-ஆம் நாள் **வியாழக்கிழமை (22-08-2024)** காலை 9.00 - 10.30 மணியளவில்

அரியலூர், தெய்வத்திரு.க.ரங்கநாதன்-சுபத்திரா
திருச்சி, தெய்வத்திரு.சு.தங்கவேல்-த.சரஸ்வதி அவர்களின் பெயரனும்
தாம்பரம், திரு.சு.ர.ராஜசேகர்-திருமதி.ரா.ஜெயஸ்ரீ இணையரின் மகனுமான
திருவளர்செல்வன்

ரா.யோகேஸ்வரன்

என்ற நம்பிக்கும்

ராணிபேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம்,
தாமரைப்பாக்கம், தெய்வத்திரு.சாமி சுந்தரமூர்த்தி-பரமேஸ்வரி,
குன்றத்தூர் திரு.க.மு.சங்கரன்-காமாட்சி அவர்களின் பெயர்த்தியும்
சென்னை, குரோம்பேட்டை, திரு.சு.முரளி-தெய்வத்திரு.இந்திரா முரளி
இணையரின் மூத்த மகளான
திருவளர்ச்செல்வி

மு.ஸ்ரீநிதி (நற்சோணை)

என்ற நங்கைக்கும்

திருமணம் தமிழ்நெறி வேள்விச்செம்மல் சிவனகம் ந.அருளரசு அவர்களால் செந்தமிழ்த் திருமுறைகள் தமிழ் வேள்வியுடன் காஞ்சிபுரம், திருவிடந்தை, நித்ய கல்யாண பெருமாள் கோயில் பின்புறம் உள்ள **மித்தம் (Miththam) இல்லத்தில்** நடைபெறவுள்ளது. அவ்வமயம் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

அன்பில் மகிழ்வில்...

திரு.சு.ர.ராஜசேகர்
திருமதி.ரா.ஜெயஸ்ரீ

திரு.சு.முரளி

நல்வரவை நாடும்...

சு.ரா.சாதவி மு. ஸ்ரீநிஷா

நூல் பரிசு :

ஔவை தாரா நடராசன் குடும்பம்

மருத்துவர் **கண்ணன்,**

முனைவர் **அருள்,**

மருத்துவர் **பரதன்**

தாரகை இல்லம், அண்ணா நகர், சென்னை.